# சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் ரூ 850 மில். உரிமை வழங்கல் மிகைக் கோரலை பதிவு செய்திருந்தது

சொஃப்ட்லொஜிக் கெப்பிட்டல் பிஎல்சியின் துணை நிறுவனமான சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி, ரூ. 850 மில்லியன் பெறுமதியான உரிமை வழங்கலுக்கு மிகைக் கோரல் பதிவாகியிருந்ததாகவும், முழுமையான பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வெற்றிகரமான இந்த உரிமை வழங்கல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது. இந்த உரிமை வழங்கலினூடாக திரட்டப்படும் நிதியை, நிறுவனத்தின் மூலதன போதுமையை உறுதி செய்வதற்கு பயன்படுத்த நிறுவனம் திட்டமிட்டுள்ளதுடன், நிறுவனத்தின் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கை மற்றும் வியாபார விரிவாக்கல் திட்டங்களை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படவுள்ளது.

அதன் பிரகாரம், ரூ. 7.31 வீதம் 116,483,901 சாதாரண பங்குகளை ஒதுக்கீடு செய்வதற்கு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் அனுமதியளித்துள்ளனர். 106,192,861 சாதாரண பங்குகளுக்காக விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், 10,192,621 மேலதிக பங்குகளுக்கும் பங்குதாரர்கள் விண்ணப்பித்திருந்ததால் மிகைக் கோரலை பதிவு செய்திருந்தது.

புதிய சாதாரண பங்குகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் திரி சவி பலகையில் 2022 டிசம்பர் 8 ஆம் திகதி பட்டியலிடப்பட்டன.

ஒதுக்கீடு தொடர்பில் சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரி இவோன் ப்ரோஹியர் கருத்துத் தெரிவிக்கையில், "உரிமை வழங்கல்களை நாம் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். தளம்பலான சந்தைச் சூழலிலும் முழுமையான கோரலைப் பதிவு செய்துள்ளது. எமது நிறுவனத்தின் மொத்த மூலதனத்துக்காக இந்த வருமதியைப் பயன்படுத்த எதிர்பார்க்கின்றோம். அதனூடாக, நிறுவனம் மூலதன போதுமை தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்திருப்பதை உறுதி செய்வோம். பங்காளர்களின் தொடர்ச்சியான நம்பிக்கை மற்றும் ஆதரவு என்பது ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளதுடன், நீண்ட கால மற்றும் நிலைத்திருக்கும் பெறுமதியை ஏற்படுத்தும் இலக்குடன் இயங்குகின்றோம்." என்றார்.

இலங்கையின் பிரதான முன்னேற்றகரமான பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமாக சொஃப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி திகழ்வதுடன், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சுகாதார பராமரிப்பு, விற்பனை, நிதிச் சேவைகள், வாகனங்கள் மற்றும் விருந்தோம்பல் போன்ற பிரிவுகளில் வர்த்தகச் செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் நிதியியல் வியாபாரச் சட்ட இல. 42 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி திகழ்வதுடன், இலங்கை மத்திய வங்கியின் 2000 ஆம் ஆண்டு நிதிக் குத்தகை சட்ட இல. 56 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்ற விசேட குத்தகை நிறுவனமாகவும் திகழ்கின்றது.